முச்சந்தி முரளி



"நீ விதைத்த
வினையெல்லாம்
உன்னை அறுக்கக்
காத்திருக்கும்
கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 100

செவ்வாய்க்கிழமை
05 மார்ச் 2024

மாசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


### எள்ளங்குளத்தில்

# தமிழர் தேசமே திரண்டு கதறியழ சாந்தனின் திருவுடல் விதைப்பு

## தலைவர் பிரபாவின் இல்லத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

**யாழ்ப்பாணம், மார்ச் 5**

பல ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர்மல்க சாந்தனின் திருவுடல் தாங்கிய பேழை நேற்றுத் திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் எள்ளங்குளம் இந்துமயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

11

புலிகளை நசுக்குவதற்காகவே

### ராஜீவ் கொலை வழக்கில் திட்டமிட்டு சிக்கவைத்தார்கள்

சாந்தனின் இறுதி அஞ்சலியில் முருகன் தெரிவிப்பு பக்.11



சாந்தன் பிறந்த வீட்டு

### கிணற்றுநீரைப் பருக்கி விடைகொடுத்த தாய்!

பக்.11

## எரிபொருள் விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 5

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒக்ரேன் 95ரக பெற்றோல் லீற்றர் 11

## சாந்தனைத்தான் இழந்துவிட்டோம்; எஞ்சியோரையாவது காப்பாற்றுங்கள்

### தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சட்டத்தரணி புகழேந்தி மன்றாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

உயிரோடு தாயிடம் அனுப்பிவைப்போம் என்ற நம்பிக்கையுடன் இருந்த நிலையில் இன்று சாந்தனை நாம் இழந்துவிட்டோம். எஞ்சிய மூவரையாவது காப்பாற்றுவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும் என தமிழ்நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி புகழேந்தி கோரிக்கை 11

## மின்கட்டணம் குறைப்பு

கொழும்பு, மார்ச் 5

மின்சாரக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 11

## சுழிபுரத்தில் முளைத்த புத்தர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

சுழிபுரம், சவுக்கடி கடற்கரையில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையால் மக்கள் மத்தியில் அச்ச 11








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையில் சாரத்தியம்:

# சாரதி அனுமதிப்பத்திரம் ஓர் ஆண்டுக்கு இரத்தாகும்!

## பரிசீலிக்குமாறு கோரிக்கை



கொழும்பு, மார்ச் 5

போதையில் வாகனம் செலுத்தி, விபத்துக்களை ஏற்படுத்துபவர்களுக்கு அடுத்த ஓர் ஆண்டுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தி வைக்கும் சட்டவரைவை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வீதி விபத்துகள் காரணமாக பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. பலர் நிரந்தர அங்கவீனமாகின்றனர்.

இதனால் மருத்துவமனைச் செலவுகள் அதிகரிக்கின்றன. பாதிக்கப்பட்டோர் உழைக்கும் திறனை இழக்கின்றனர். இந்த இரு விடயங்களும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 310 பேர் விபத்துகளில் சிக்கி மரணமடைந்துள்ளதுடன் 6 ஆயிரத்து 195 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே 11 பேர் கொண்ட ஒரு சிறப்புக்குழுவை அமைத்து வகைதொகையின்றி அதிகரித்துச்செல்லும் விபத்துகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சிறப்புக்குழு எந்தெந்தப் பிரதேசங்களில் விபத்துகள் அதிகம் இடம்பெறுகின்றன, விபத்துகளுக்கான காரணம் போன்றவற்றை நான்கு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். விபத்துகளுக்கான அபராதத் தொகையை அதிகரிப்பதுடன் கட்டம் கட்டமாக சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்யும் வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-6)

## மின்சாரம், பெற்றோலியம் அத்தியாவசிய சேவைகள்

கொழும்பு, மார்ச் 5

மின்சாரம் மற்றும் பெற்றோலியப் பொருள்கள் விநியோகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மின்சாரம், பெற்றோலியப் பொருள்கள் மற்றும் எரிபொருளின் விநியோகம் அல்லது மின் விநியோகம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் வெளியிடப்பட்ட அறிவிப்பில் இந்தச் சேவைகள் அத்தியாவசியமான பொது சேவைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஏ-இ)

## அரசாங்க வருவாயை அதிகரிக்கத் திட்டங்கள்

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

அரச வருவாயை அதிகரிப்பதற்குத் திட்டங்கள் உள்ளன. அது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடியுள்ளோம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாங்கள் பணத்தைப் பெற முடியும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடியுள்ளோம். திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் சட்டங்கள், பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. பணியாளர்களின் செயற்திறனை அதிகரித்தால், கிடைக்கும் வருவாயை இரட்டிப்பாக்கலாம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றவுடன் மக்களின் உணவு, கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை உறுதி செய்யும்.

இரத்தின வளங்கள், தேயிலைச் செய்கை, சுற்றுலா மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்ட நீண்ட காலத் திட்டங்களை வகுத்துள்ளோம் - என்றார். (ஏ-இ)

## அச்சுறுத்தல்களுக்கு பணியாது பெரமுன!

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 5

எமது அரசியல் பயணத்தை அச்சுறுத்தி தடுப்பதற்கு சிலர் முற்படுகின்றனர். அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து தீர்மானம் எடுக்கும் அணி அல்ல எமது கட்சி.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பதில் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார். (ச-44)

## டிஜிற்றல் சேவைகளுக்கு மாறும் போக்குவரத்துத் திணைக்களம்!

நேற்று முதல் டிஜிற்றல் முறைமைக்கமைய மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் ஊடாக வழங்கப்படும் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சகல கிளைகள் ஊடாகவும் வழங்கப்படும் சேவைகளுக்காக டிஜிற்றல் முறைமையின்கீழ் பதிவு செய்து நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஏ-இ)

## தேங்காய் விலை அதிகரிப்பு; உணவகங்களுக்குப் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 5

தேங்காய் விலை உயர்வானது எதிர்காலத்தில் உணவுப்பொதி மற்றும் கறி உணவுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என உணவுத்துறை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

60 முதல் 80 ரூபா வரையில் இருந்த தேங்காயின் வழமையான விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ருக்ஷான் ஹர்ஷன தெரிவித்தார். (ஏ-இ)

## உணவு விலை அதிகரிப்புக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

சில உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

உணவுப்பொருள்களின் விலையை அதிகரிக்க அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு எதிராகவே இந்தச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சந்தையில், உணவுப்பொருள்களின் விலையைத் தன்னிச்சையாகத் தீர்மானிக்கும் அதிகாரம் தனியார் நிறுவனங்களுக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-இ)

## சமன் ரத்நாயக்க இரகசிய வாக்குமூலம்

கொழும்பு, மார்ச் 5

தரமற்ற 'இம்யூனோகுளோபுலின்' ஊசியை இறக்குமதி செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மேலதிக சுகாதார செயலாளர் சமன் ரத்நாயக்க, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் கமரா மூலம் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்கியுள்ளார்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசியை இறக்குமதி செய்த வழக்கில் மார்ச் 14ஆம் திகதி வரை அவர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ஏ-இ)

## இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றனர் ராஜபக்சக்கள்

### விமல் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 5

இலங்கையின் இறையாண்மையை இந்தியாவுக்கு காட்டிக்கொடுக்கும் நடவடிக்கை இடம்பெற்றாலும் பொதுஜன பெரமுனவும் சங்கமும் (பிரதமர் தினேஷ் குணவர்த்தன), ராஜபக்சக்களும் மௌனம் காத்து வருகின்றனர்.

ஏனைய கட்சிகளும் 'இந்திய சரணம் கச்சாமி' என்ற நிலையிலேயே உள்ளன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரெலிக்கொம்மை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சிக்கின்றனர். இலங்கை மின்சாரசபையையும் ஆறு கூறுகளாகப் பிரித்து இந்தியாவுக்கு வழங்குவதற்கான ஏற்பாடு இடம்பெறுகின்றது. ரெலிக்கொம் என்பது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாகும். இதன் நிர்வாகம் இந்திய நிறுவனத்தின் கைகளுக்குள் சென்றால் என்ன நடக்கும்? எமது தாய்நாட்டை இந்திய மயப்படுத்தும் இலங்கையின் இறையாண்மையை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. இந்திய ரூபா பயன்பாடும் இங்குவரவுள்ளது. இரு நாட்டு சுங்கங்களையும் இணைக்கும் முயற்சியும் இடம்பெறுகின்றது.

இந்திய மயமாக்கலின் பாரதூரம் பற்றி எந்தவொரு அரசியல் கட்சியும் பேசுவதில்லை. அவை எல்லாம் 'இந்திய சரணம் கச்சாமி' என்ற நிலையிலேயே உள்ளன. பொருளாதாரத்தை மீட்பதற்கு இங்கு உதவி வழங்கப்படவில்லை. அதேபோல இலங்கையின் இறையாண்மையை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. இந்த அபாயத்தில் இருந்து நாட்டை மீட்க ஒன்றுபடுவோம் - என்றார். (ஏ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் தடுப்பு வதை கொடுமையின் உச்சம்!

## 'பொ-பொ' பேரெழுச்சி இயக்கம் கண்டனம்

வவுனியா, மார்ச் 5

**உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரும் ஓர் ஆண்டுக்கு மேலாக சாந்தன் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டமை கொடுமையின் உச்சம். இந்தச் சிறப்பு முகாம்களில் அரசியல் கைதிகளாக இருக்கும் ஈழத்தமிழர்கள் சுதந்திரத்தை அனுபவிக்க வழிசெய்யவேண்டும்.**

இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- பல்லாண்டு காலமாக பிரிந்திருந்த தாயக மண்ணில் காலடி பதிக்க ஆவலுடன் காத்திருந்த சாந்தன் உயிரற்ற சடலமாகவே எடுத்துவரப்பட்டுள்ளார்.

பல வருடக் காத்திருப்பின், மகனைக்காண ஆவலாகக் காத்திருந்த தாயாரின் துயர் சொல்லிமாளாது. இந்திய வல்லாதிக்கத்தால் ஈழத்தமிழர் மீது தொடர்ந்தும் நடத்தப்படும் இந்த வன்செயல் கண்டிக்கப்படவேண்டும். 'சிறப்பு முகாம்கள்' மூடப்பட்டுத் தொடர்ந்தும் அரசியல் கைதிகளாக இருக்கும் ஈழத் தமிழர்கள் சுதந்திரத்தை அனுபவிக்க வழிவகை செய்ய வேண்டும். ஏனைய மூவரையும் விடுத்து அவர்கள் தமது உறவுகளுடன் சேர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச-66)

## கும்பாபிஷேகம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.25 மணி முதல் மு.ப. 10.33 மணி நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத் துக்கான கிரியைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.12 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி 21 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நடைபெறுமென மேற்படி ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். (ப-66)



## மாணவிகளுடைய நிர்வாண வீடியோ

### இளைஞர் கைது

கொழும்பு, மார்ச் 5

பல்கலைகழகத்தில் கல்வி கற்கும் இரு மாணவிகளை நிர்வாணமாக வீடியோ பதிவு செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ருலபனை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைதானவர் வெதுப்பகம் ஒன்றின் உரிமையாளரான 20 வயதுடைய இளைஞராவார்.

பாதிக்கப்பட்ட இரு பெண்களும் விடுதி ஒன்றில் தங்கியுள்ள நிலையில் அவர்களில் ஒருவர் குளிப்பதற்காக தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கும்போது குளியறையில் கமரா இருப்பதை அவதானித்துள்ளார். இதையடுத்து அந்த மாணவிகள் பொலிஸாரிடம் முறையிட்ட நிலையில், விடுதி உரிமையாளரின் மகன் (வெதுப்பகத்தின் உரிமையாளர்) கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## மன்னாரில் உச்சவெப்பம்

கொழும்பு, மார்ச் 5

மன்னார் மாவட்டத்தில் உச்சக்கட்ட வெப்பநிலை நிலவும் என்றும், இது தொடர்பில் மக்கள் அதீத அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள எச்சரிக்கைக் குறிப்பில் உள்ளதாவது:- சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் அநுராதபுரம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அண்மைக்காலமாக அதீத வெப்பநிலை தொடர்கின்றது.

களுத்துறை தொடக்கம் காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். கடல் பிராந்தியங்களில் காற்றானது மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோமீற்றர் வேகத்திலும் காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை, பொத்துவில், அம்பாந்தோட்டை ஊடாக மாத்தறை வரையான இடங்களிலும் காற்று வீசும் - என்றுள்ளது. (ம)

# கொளுத்தும் வெயிலில் மாணவருக்குத் தண்டிப்பு

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

பாடசாலையொன்றில் உள்ள மாணவர்களுக்கு ஆசிரியரொருவரால் வெயிலில் மண்டியிடும்படி தண்டனை வழங்கப்பட்ட சம்பவமொன்று தற்போது சமூகவலைத்தளங்களில் பரவி வருகின்றது.

கொழும்பு நாரஹென்பிட்ட பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

"வெயிலின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் இது போன்ற செயலை ஏற்கமுடியாது.

அதுமாத்திரமன்றி மாணவர்களை உடல் ரீதியாகத் தண்டிக்க முடியாது. எனவே, கல்வி அதிகாரிகளால் இதுதொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம)



# புதினம் தெரியுமோ?

**கண்ணால காணுறதும் பொய், காதால கேக்கிறதும் பொய், தீர விசாரிச்சு அறியிறதே மெய் எண்டு சொல்லுவினம். அது இப்பத்தைப் பேஸ்புக் விசயத்தில மெத்தச் சரி. பேஸ்புக்கில ஏதும் ஒண்டைப் போட்டால் அதை உண்மையெண்டு நம்பிக்கொண்டு காவித்திரியிறது தான் இப்ப உலகநடப்பா மாறிட்டுது. ரண்டுமூண்டு நாளா பேஸ்புக்கில 'வல்வை முதியோர் இல்லத்தில பழைய சாப்பாடுகளைத்தான் குடுக்கினம்' எண்ட கணக்கில ஒரு வீடியோ சுத்திக்கொண்டு திரியுது. அதில முதியோர் இல்லத்தில இருக்கிறவைக்கு பழசான சாப்பாடு, அழுகின வாழைப்பழம் குடுக்கிற மாதிரியும், பிரிட்ஜ்ஜுக்குள்ள வைச்ச சோத்தையே திரும்ப பானைக்குள்ள போட்டு அவிக்கிற மாதிரியும் அந்த வீடியோ ஓடுது. அதைப் பார்த்திட்டு எல்லாரும் பேஸ்புக்கில அந்த முதியோர் இல்லக்காரரை கரிச்சுக் கொட்டுகினம். ஆனாலும் அந்த வீடியோவில இல்லத்தின்ர நிர்வாகக்காரர் பழைய சாப்பாட்டைக் குடுக்கச் சொல்றமாதிரி ஒரு காட்சியும் இல்லை. அதோட ஒரு பெண் பணியாளர் கொஞ்சம் உரத்த தொனியில 'இந்தாங்கோ இதைச் சாப்பிடுங்கோ, நிர்வாகக்காரர் தாறதைத்தானே நாங்கள் தரலாம்' எண்டு மூண்டு நாலு இடத்தில திரும்பத் திரும்பச் சொல்லுறதும், அந்த முதியோர் இல்லத்துக்கு கெட்டபேரை உண்டாக்கோணும் எண்டு வலிஞ்சு எடுத்த வீடியோவா இருக்குமோ எண்டு பட்சிக்கு பொறி தட்டிச்சு. உடன இல்லக்காரரோட பட்சி கதைச்சது.**

**அதையேன் கேக்கிறியள். நாங்கள் அப்பிடி கூடாத, பழைய சாப்பாடு குடுக்கிறேலை. கோயிலால புக்கை, குழைசாதம் வந்தால் அதைக் குடுப்பம். மற்றப்படி நாங்கள் அண்டண்டைக்குச் சமைச்சுத்தான் எல்லாம் குடுக்கிறது. இஞ்ச வேலைக்கு நிண்ட ஒண்டிரண்டு பேர் ஒழுங்கா வேலை செய்யேலை எண்டு பேசிப்போட்டன். அதுக்கு அவை அடுத்த நாள் 'தாங்கள் பணிப்புறக் கணிப்பாம்' எண்டிட்டு, இஞ்ச இருக்குற வயசானவைக்கு சாப்பாடு, தேத்தண்ணி குடுக்காமல் இருந்திட்டினம். பிறகு நான் தான் ரீ வைச்சு, பணிஸ் வாங்கி குடுத்தனான். இப்பிடி முதியோருக்கு சாப்பாடு போடாமல் பணிப்புறக்கணிப்புச் செய்யிறவையை என்னெண்டு வைச்சிருக்கிறது. அதால இதைத் தூண்டி விட்ட ஆளை வேலையால போன 26 ஆம் திகதி நிப்பாட்டிப் போட்டம். ஆனா அவா தான் போகமாட்டன் எண்டு அடம் பிடிச்சவா, பிறகு பொலிஸுக்கு போய்த் தான் நாலைஞ்சு நாளைக்குப் பிறகு இஞ்ச இருந்து போனவா. அப்பிடி வேலையை நிப்பாட்டிப்போட்டம் எண்ட கோபத்தில தான், இஞ்ச நிண்ட நாலைஞ்சு நாளில இப்பிடி தானே பழைய சாப்பாடு, பழமெல்லாம் குடுத்து வீடியோ எடுத்து போட்டிருக்கிறா எண்டு அந்த முதியோர் இல்லத்தின்ர தலைவரா இருக்கிறவா சொன்னா.**

**அப்பிடியெல்லாம் இல்லை. நாங்கள் மூண்டுபேர் முதியோருக்கு சாப்பாடு குடுக்காமல் பணிப்புறக்கணிப்புச் செய்தது உண்மை. அப்பிடியெண்டால் மூண்டுபேருக்கு மெல்லோ கடிதம் தந்து நிப்பாட்டியிருக்க வேணும். என்னை மட்டும் என்னெண்டு நிப்பாட்டுவினம்? நான் தான் அந்த வீடியோ எடுத்தனான். 26 ஆம் திகதிக்குப் பிறகுதான் எடுத்தன். ஆனால் நான் அதை வெளியில விடேலை. ஆர் பேஸ்புக்கில போட்டதெண்டு எனக்குத் தெரியாது. அந்தப் பழைய சோறு, அழுகின பழம் எல்லாம் அங்க இருந்ததுதான். இல்லாததை நான் எப்பிடி வீடியோ எடுப்பன்? எண்டு வேலையை விட்டு நிப்பாட்டுப்பட்ட பராமரிப்பு வேலை செய்தவா சொன்னா.**

**ரண்டுபேர் சொன்னதையும் வைச்சுப் பாக்கேக்க உங்களுக்கு எது உண்மையெண்டு தெரியுதுதானே?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்படையின் சைக்கிளோட்டம்; காலிமுகத்திடலில் ஆரம்பம்




கொழும்பு, மார்ச் 5

இலங்கை விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சைக்கிளோட்டப் போட்டியை காலிமுகத்திடலில் இருந்து யாழ்ப்பாணம் வரை நடத்தத் திட்டமிட்ட நிலையில், காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் போட்டிகள் ஆரம்பித்தன.




காலிமுகத்திடலில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் மொத்தம் 652 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக இம்முறை சைக்கிளோட்டப்போட்டி முன்னெடுக்கப்படுகின்றது.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாகப் போட்டிகள் ஆரம்பமாகின. விமானப்படைத் தளபதி எயார்மார்ஷல் உதேனி ராஜபக்ச சைக்கிளோட்டப்போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை விமானப் படையால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விமானப்படை சைக்கிளோட்டப் போட்டிக்காக 'நிப்பொன் பெயின்ட்' நிறுவனம் பிரதான அனுசரணை வழங்குகின்றது.



இலங்கையின் முன்னணி சைக்கிளோட்டப் போட்டியாக மாறியிருக்கும் விமானப் படை சைக்கிளோட்டப் போட்டி இம்முறை தொடர்ச்சியாக 25 ஆவது தடவையாக இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## ட்ரம்பைத் தோற்கடித்து நிக்கி ஹாலே வரலாறு

வொஷிங்டன், மார்ச் 5

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், குடியரசுக் கட்சியின் வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்காக வொஷிங்டன் நகரில் நடந்த உட்கட்சித் தேர்தலில் நிக்கி ஹாலே ட்ரம்பை வீழ்த்தியுள்ளார்.

குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்கான உட்கட்சித் தேர்தல் வரலாற்றில் பெண்ணொருவர், பிராந்திய தேர்தலொன்றில் வெற்றியீட்டியமை இதுவே முதல் தடவையாகும்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வொஷிங்டன் நகரில் நடைபெற்ற தேர்தலில் நிக்கி ஹாலே 63 சதவீத வாக்குகளைப் பெற்றார். இதன் மூலம் நகரில் நிக்கி ஹாலே 19 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறுவார். முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 33.3 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவருக்கு வொஷிங்டனிலிருந்து பிரதிநிதிகள் எவரும் கிடைக்கவில்லை.

டொனால்ட் ட்ரம்ப், நிக்கி ஹாலே ஆகிய இருவர் மாத்திரமே தற்போது குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான போட்டியில் நீடிக்கின்றனர். குடியரசுக் கட்சியில் அமெரிக்கா முழுவதும் 2 ஆயிரத்து 429 பிரதிநிதிகள் உள்ளனர். ஜனாதிபதி வேட்பாளராகுவதற்கு குறைந்தபட்சம் ஆயிரத்து 215 பிரதிநிதிகளின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## காஸாவில் அமைதி; கெய்ரோவில் பேச்சு

கெய்ரோ, மார்ச் 5

காஸாவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுகளுக்காக சமாதான அனுசரணையாளர்கள் இன்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

காஸாவில் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகி இருக்கும் பொதுமக்களுக்கு விமானம் மூலம் நிவாரணப் பொருள்களை வழங்க வெளிநாட்டு அரசாங்கங்கள் தீர்மானித்துள்ளதை தொடர்ந்து, காஸாவில் நிரந்தர போர் நிறுத்தத்துக்கான வழிவகைகள் குறித்து சமாதான அனுசரணையாளர்கள் கலந்துரையாடி வருகின்றனர்.

இன்னும் ஓரிரு தினங்களுக்குள் காஸாவில் நீண்ட அமைதி சாத்தியப்படும் என்று அமெரிக்கா முன்னதாகத் தெரிவித்திருந்த நிலையில், அது தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுகளுக்காகவே சமாதான அனுசரணையாளர்கள் இன்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# உலகம் வெட்கப்படும் வரலாறு உருவாகிறது



## ரஷ்யத் தாக்குதல் தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி கவலை

கீவ், மார்ச் 5

உக்ரைனுக்கான இராணுவ உதவிகள் கிடைக்காதுபோனால் உலகம் வெட்கப்படும் வரலாறு பதியப்படும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்குப் பல்வேறு இராணுவ உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளபோதிலும், அமெரிக்க காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட இருவேறு கருத்துக்களால் அந்த உதவி நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே ஷெலன்ஸ்கி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கும்மேற்குநாடுகளின்தீர்மானத்தை வரவேற்கின்றேன். ஆனால், வழங்கப்படும் ஆயுதங்கள் ரஷ்யாவை எதிர்ப்பதற்குப் போதுமானவையல்ல. ரஷ்யாவின் தாக்குதலை முறியடிப்பதற்கான இராணுவ உதவிகள் கிடைக்காதுபோனால் உலகம் வெட்கப்படும் வரலாறு ஒன்று ஏற்படும். உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கவிருந்த இராணுவ மற்றும் ஏனைய உதவிகள் காங்கிரஸில் இடம்பெற்ற வேறுபட்ட கருத்துகளால் தடுக்கப்பட்டுள்ளன. அதனை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என ஷெலன்ஸ்கி மேலும் வலியுறுத்தியுள்ளார். (ம)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்குப் பிள்ளைகள் மூலமும் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கன்னி:** காலைமுதலே சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்துடன் உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். எதிரிகள் பணிந்து போவார்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் சில சங்கடங்கள் ஏற்பட்டு மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தும். பொறுமை மிக அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்வது மிக அவசியம். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**மீனம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## இனியும் கிள்ளுக்கீரையல்ல!

இந்தியா இதுநாள்வரையில் ஏமாற்றியதைப் போன்று இனியும் எம்மை ஏமாற்ற முடியாது. அவ்வாறு ஏமாற்ற எத்தனித்தால் - ஏமாற்றிக்கொண்டே இருந்தால், இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவு முற்றாக அறுக்கப்பட்டு, ஈழத்தமிழர்களுக்கும் தொப்புள்கொடிகளான தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் மட்டும் எஞ்சிநிற்கும் என்று வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் எச்சரித்துள்ளன. சாந்தனுக்கான அஞ்சலிப்பை முன்னிட்டு, கட்சிக் கொடிகளுக்குக் கீழ்ப்பட்டதாக அல்லாமல் 'ஒரு சிவில் சமூகமாக' வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை மிகக் கனதியானது. இன்னும் சொல்லப் போனால் பொதுமக்களின் தற்கால மனோநிலையையும், இந்தியா மீதான தமிழர் மனங்களில் மாறிவரும் பார்வையையும் இந்த அறிக்கை வலுவாகவே கட்டியம் செய்கின்றது. ஆதலால், சிவில் சமூகத்தின் இந்த அறிக்கையை, கட்சி நிலைப்பாட்டுக் கண்டன அறிக்கையாக இந்தியா கொள்ளக்கூடாது. இது ஓர் இனக்குழுமத்தின் மனக்குமுறலும், அந்த இனக்குழுமத்தின் ஏமாற்றத்தின் வெளிப்பாடுமாகும்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் முப்பத்தியிரண்டு ஆண்டுகள் சிறைக்குள் அடைக்கப்பட்டு, இந்திய - இலங்கை, தமிழக அரசுகள் முற்றாக கைவிட்ட நிலையில், நீதிமன்றத்தின் தற்துணிவின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட சாந்தனுக்கு தான் நேசித்த மண்ணை, தான் நேசித்த மக்களை, தன் தாயாரை ஒருநாள்கூட முத்தமிட்டுவிட முடியாத அவலநிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றால் அதற்கு இந்திய அரசின் சதித்திட்டமே முதன்மைக் காரணம். தீவிர நோயாளியாகச் சிறை மீண்ட சாந்தனை குறைந்தபட்ச மனிதாபிமானத் துடன்கூட இந்திய - இலங்கை - தமிழக அரசுகள் அணுகவில்லை என்பதே வெளிப்படை உண்மை.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஈழத்தமிழர்கள் எனப்படுவோர் பிராந்தியத்தில் தன் வல்லாதிக்கத்தைப் பலப்படுத்தவும் நிலைப்படுத்தவும் தேவைப்படும் கிள்ளுக்கீரைகள் அவ்வளவே. தமிழர்களின் இனவிடுதலைப் போராட்டத்தில் நேரடித் தலையீட்டைச் செலுத்திய நாடாக இந்தியா இருந்தபோதிலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தன்னால் முன்வைக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தைக்கூட இன்னமும் முற்றாக நடைமுறைப்படுத்த அந்த நாட்டுக்குத் திராணியில்லை. ஈழத்தமிழர்களுக்காக தீவிர ஈடுபாட்டுடன் செயற்பட்டால், கொழும்பு சீனாவின் பக்கம் சாய்ந்துவிடலாம் என்ற எண்ணத்திலேயே தன் ஒவ்வொரு நகர்வையும் இந்தியா மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான வெளிவிவகாரக் கொள்கைகள் கொண்ட இந்தியாவிடம், தீவிர நோயாளியான சாந்தனை குறைந்தபட்சம் ஒருநாளேனும் தன் தாயாருடன் இணைந்திருக்க அனுமதிக்காத இந்தியாவிடம் தீர்வு என்ற பெயரில் எதைத்தான் எதிர்பார்த்துவிட முடியும்.

தன் மீதான களங்கத்தை இந்தியா துடைத்தெறிய வேண்டுமாயின், சிறப்பு முகாமுக்குள் எஞ்சியிருக்கும் றொபேர்ட் பயஸ், முருகன் மற்றும் ஜெயக்குமார் என்பவர்களின் 'உண்மையான' விடுதலைக்கு வழிவகுப்பதுடன், ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு, தன் 'ஆதாம் காலத்து' புராணமான '13ஆவது திருத்தத்துக்கும்' அப்பாற்பட்ட நடவடிக்கைகளைக் கைக்கொள்ளவேண்டும். அதை இந்தியாவால் செய்யமுடியாத பட்சத்தில், 'இந்தியா... இந்தியா..' என இந்தியாவின் பின்னால் ஓடிக்கொண்டிருக்க வேண்டிய எந்த அவசியமும் ஈழத்தமிழர்களுக்கும் இல்லை. தன் பிராந்தியநலனைக் கருத்திற்கொண்டு ஈழத்தமிழர்களை இரண்டாம் பட்சமாக்க இந்தியாவால் முடிகின்றதென்றால், இனத்தின் நலன்களைக் கருத்திற்கொண்டு இந்தியாவை இரண்டாம் பட்சமாக்க ஈழத்தமிழர்களாலும் முடியும். அதில் தவறொன்றும் இல்லை.



# பயங்கரவாதத் தடைச்சட்டம் மேலும் முன்னேற்றம் தேவை

## வலியுறுத்துகின்றது ஐரோப்பிய ஒன்றியம்

**கொழும்பு, மார்ச் 5**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் விடயத்தில் இலங்கை மேலும் முன்னேற வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 26ஆவது கூட்டம் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார சேவைப்பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்திய பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் பயோலா பம்பலோனி ஆகியோர் தலைமையில் கடந்த மாதம் 22ஆம் திகதி ப்ருஸேல்ஸில் நடைபெற்றது.

அதில் பொருளாதார பாதுகாப்புக் கொள்கை, செயற்கை நுண்ணறிவுசார் கொள்கை, வர்த்தக மற்றும் மனித உரிமைகள் நிலைப்பாடு, சூழலியல் பாதுகாப்பு, உலகளாவிய இணைப்பு உத்தி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்திய - பசுபிக் உத்தி என்பன உள்ளடங்கலாக கடந்த சில வருடங்களில் தாம் பின்பற்றிவந்த முக்கியமான கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென அவர்கள் உறுதியளித்தனர். அதற்குப் பதிலளித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இலங்கை அழைப்பு விடுக்கும் பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக்குழுவொன்றை அனுப்பத் தயார் என்று தெரிவித்தனர். (எ-இ)

### கதிரியக்குநர்கள் பற்றாக்குறை

கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறை காரணமாக பல மருத்துவமனைகளின் சேவைகள் தடைப்பட்டுள்ளன என்று அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நிரந்தர அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறியமையே இதற்குக் காரணம் என்று சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார். (ச-இ)

### இலங்கையில் அதிகரிக்கும் வயதானவர்கள்

கொழும்பு, மார்ச் 5

தெற்காசிய நாடுகளுள் 65 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை அதிக வீதத்தால் காணப்படும் நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

எண்ணிக்கையளவில் சுமார் 25 இலட்சமாக காணப்படும் நிலையில் இது 11 வீதமாக காணப்படுகின்றது. பங்களாதேஷில் இது 6 வீதமாகக் காணப்படுகின்றது. ஆப்கானிஸ்தானில் 2 வீதமாகவும், பூட்டானில் 6 வீதமாகவும், இந்தியாவில் 7 வீதமாகவும் , மாலைதீவில் 5 வீதமாகவும் பாகிஸ்தானில் 4 வீதமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

### போதை புனர்வாழ்வு புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, மார்ச் 5

போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு தொடர்பான புதிய வேலைத்திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (ச-இ)

### 'அஸ்வெசும'வில் குளறுபடி: எதிராகச் சட்டநடவடிக்கை

கொழும்பு, மார்ச் 5

'அஸ்வெசும' திட்டத்துக்குத் தவறான தகவல்களை வழங்கி இணைந்து கொள்ள முயற்சிப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் முதல் 'அஸ்வெசும' பயனாளர்களின் எண்ணிக்கை 24 இலட்சமாக அதிகரிக்கப்படும். 'அஸ்வெசும' திட்டத்துக்காகத் தவறான தகவல்களை வழங்கிய 7,000 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டால், சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

### நாளை

06.03.2024

புதன்கிழமை

மாசி–23

ஏகாதசி விரதம்

சுபநேரம் : 04.55 – 06.25

ராகுகாலம் : 12.25 – 01.55

### நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கை என்பது வெற்றியை
கொண்டாடுவது மட்டுமல்ல,
தோல்விகளை வீழ்த்துவதும் தான்.

–சேகுவேரா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவற்குள நீர்ப்பாசனமின்றி பிந்திய நெல்விதைப்பு பாதிப்பு

## விவசாயிகள் கவலை

வவுனியா, மார்ச் 5

கடந்த வருட இறுதியில் பெய்த கடும்மழை காரணமாக காலம்பிந்தி விதைத்தவர்களுக்கு வவுனியா பாவற்குளத்தின் கீழான நீர் கிடைக்கப்பெறாமையால் பயிர்கள் அழிவடையும் தறுவாயில் உள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்துக்கமைய பெப்ரவரி 15 ஆம் திகதி குளத்து நீர் திறந்து விடப்பட்டு மூடப்பட்டது.

கடந்த வருட இறுதியில் பெய்த கடும் மழை காரணமாக காலம்பிந்தி விதைத்தவர்களின் வயல் நிலங்களுக்கு நீர் கிடைக்கப்பெறவில்லை. அதனால் 125 ஏக்கர் வயல் நிலம் அழிவடையும் நிலையில் உள்ளது. தற்போது குளத்தில் போதியளவு நீர் காணப்படுகின்றது. எனவே அதிகாரிகள் குளத்து நீரைத் திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

இதுதொடர்பாக பாவற்குள பொறியியலாளர் ஒருவரிடம் கேட்டபோது, பாவற்குளம் பெரிய நீர்ப்பாசனக் குளம் என்பதால் காலம்பிந்தி விதைப்பவர்கள் தொடர்பாக தன்னிச்சையாக முடிவை எடுக்க முடியாது. தற்போது நீரைத் திறந்து விட்டால் ஏனைய விவசாயிகள் பாதிப்படைவர். இம்மாதம் சிறுபோகத்துக்கு தயாராகிவரும் நிலையில் அதிலும் சிக்கல் நிலைமை உருவாகும் - என்றார். (ச-110)



கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் 'மழலைத் தமிழ் மலர்' நூல் வெளியீடு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச)




வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்துக்கு கரைச்சிப் பிரதேச செயலகத்தால் அறிவியல் நகரில் வழங்கப்பட்ட காணியில் கடந்த சனிக்கிழமை பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது. (ப-9)

# மாயமான இளைஞர்; திருட்டு வழக்கின் சாட்சி

முல்லைத்தீவு, மார்ச் 5

2021ஆம் ஆண்டு இடம்பெற்ற திருட்டு வழக்கின் சாட்சியமாக நீதிமன்றில் முன்னிலையாக இருந்த இளைஞனை கடந்த நவம்பர் மாதத்திலிருந்து காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கு பாண்டியன்குளத்தில் வீட்டின் உரிமையாளர் இல்லாத நேரம், வீடு புகுந்த திருட்டுக் கும்பல் பொருள்கள் அனைத்தையும் சூறையாடியிருந்தது. இது தொடர்பில் மாங்குளம் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் மாந்தை கிழக்கின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக ஆலய உண்டியல்கள் மற்றும் மக்களின் கால்நடைகள் என்பன திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் சந்தேகத்தில் இளைஞன் கைதாகியிருந்தார்.

அந்த இளைஞன், பாண்டியன்குளத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கியிருந்த நிலையில், வழக்கின் சாட்சியாக அவரையும் இணைத்திருந்தனர். இவ்வாறான தொரு நிலையிலேயே மேற்படி இளைஞன் நவம்பர் மாதம் முதல் காணாமற் போயுள்ளான்.

இளைஞனின் கைத்தொலைபேசி வேறொரு நபரின் பயன்பாட்டில் இருப்பது காணாமற் போன இளைஞனின் சகோதரனால் கண்டறியப்பட்டு அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

விசாரணைகளில், வேட்டைக்குச் சென்ற இடத்தில் கைத்தொலைபேசியை கண்டெடுத்தாக குறித்த நபர் தெரிவித்தது டன், அந்த இடத்தை பொலிஸாருக்கும் அடையாளம் காட்டியுள்ளார்.

இளைஞன் காணாமற் போன சில தினங்களில் ஆற்றங்கரையை அண்டிய ஒதுக்குப்புறமான காட்டுப்பகுதியிலிருந்து அவன் பயன்படுத்தியதாக நம்பப்படும் துவிச்சக்கரவண்டி மீட்கப்பட்டிருந்தது.

இதேவேளை மாந்தை கிழக்கில் மர்மமான முறையில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், அவர்களும் நீதிமன்ற வழக்குகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் மிக முக்கியமான சாட்சியமாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-35)

# ஒதியமலைக்கு பேருந்து சேவை

## கிராம மக்கள் கோரிக்கை

ஒதியமலை, பெரியகுளம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து சேவை இடம்பெறாததால் அந்தப் பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர்.

1984ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் இடம்பெயர்வுக்குப் பின்னர் இரு கிராமங்களுக்கும் பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை என அங்கு வாழ்கின்ற மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒதியமலை, பெரியகுளம் கிராமங்களுக்குப் பேருந்துகள் வருகை தராமல், ஒட்டுசுட்டான் நகரத்திலிருந்தே ஒதியமலை என்ற பெயர்ப்பலகையுடன் தற்போது சேவையில் ஈடுபடுகின்றன. ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்புப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள், ஒதியமலைப் பகுதியிலும் சேவையில் ஈடுபட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

# வண்ணை வைத்தீஸ்வரர் கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை 6ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

# கல்வி உதவித்தொகை விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மார்ச் 5

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சுமார் ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான www.facebook.com/president.fund க்குள் நுழைந்து விண்ணப்பப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்களை மூன்று மொழிகளிலும் பெறமுடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாணவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் தாம் கற்கும் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும்.

முதலாம் தரத்திலிருந்து 11ஆம் தரம் வரையிலான ஒரு லட்சம் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச-இ)

# 2,700 ஏக்கரில் சிறுபோகம்


முல்லைத்தீவு, மார்ச் 5

முல்லைத்தீவு மாவட்ட தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 150 ஏக்கரில் சிறுபோகப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக நெற்செய்கைக் குழு கூட்டம், குமுழமுனை கமநல அபிவிருத்தி நிலையத்தில் மேலதிக மாவட்ட செயலர் எஸ்.குணபாலன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கழிவு வாய்க்கால்களை மறித்து நெற்செய்கை மேற்கொள்வதன் மூலமும் விவசாயிகளின் வேண்டுகோளுக்கமையவும் 2 ஆயிரத்து 700 ஏக்கரில் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்வது என அதில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலாளர் சி.ஜெயகாந்த், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி ம. உமாமகள், முல்லைத்தீவு பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சி.விகிர்தன், முத்துஐயன் கட்டுப் பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் திருமதி யோ.மஞ்சுளா, மாவட்டம் சார் திணைக்களத்தின் அதிகாரிகள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ப-13)




கந்தர்மடம், அறிவாலயம் ஆளுமை விருத்தியகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா நல்லூர் ஆதீன கலா மண்டபத்தில் மேற்படி அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் திருமதி சிவநயனி சர்வேஸ்வரா தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன், யாழ். புத்தூர் மடிகே பஞ்சசீல வித்தியாலய அதிபர் திருமதி கவிதா லலீசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ப-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடனைச் செலுத்தக்கோரி வழக்கு
# 5 மாத அவகாசம் கோரும் இலங்கை

**கொழும்பு, மார்ச் 5**

**கடனைத் திருப்பிச் செலுத்தாமை தொடர்பாகப் பத்திரப் பதிவுதாரர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பில், நியூயோர்க் பெடரல் நீதிபதியிடம் தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்த மேலதிகமாக ஐந்து மாதகால அவகாசம் வேண்டும் என்று இலங்கை கோரியுள்ளது.**

2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஹமில்டன் ரிசேர்வ் வங்கி லிமிட்டெட் மூலம் இலங்கை மீது வழக்குத் தொடரப்பட்டது. ஹமில்டன் ரிசேர்வ் வங்கி லிமிடெட் அந்த மாதத்தில் செலுத்த வேண்டிய இலங்கையின் 250 மில்லியன் டொலர் பத்திரத்தின் முழுப்பணத் தையும் கோரியது.

வழக்குத் தாமதத்தை நீட்டிப்பதற்கான இலங்கையின் அண்மைய (கடந்த வெள்ளிக்கிழமை) கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், ஹமில்டன் ரிசேர்வ் வங்கி, முக்கியமான பேச்சு விவரங்களை அந்தநாடு தடுத்துள்ளது என்று குற்றஞ்சாட்டி ஆட்சேபித்தது.

அதேவேளை, அண்மையில் நேர்காணலில் கருத்துத்தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், விரிவான கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கும், இறையாண்மையில் இருந்து மீள்வதற்கும் அதன் முயற்சிகளின் ஒருபகுதியாக, தனியார் கடனாளிகளுக்கான கடப்பாடுகளை நிவர்த்தி செய்வதில் இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று தெரிவித்தார். (எ-இ)

## பழைய தவறுகளை விடுகிறது இலங்கை

### மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் எச்சரிக்கை

இலங்கை மீண்டும் பழைய தவறுகளைச் செய்கின்றது என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை மானியங்களை வழங்கும் பழைய நிலைக் குத் திரும்பக்கூடாது. எரிபொருள், மின்சாரம் உரம் போன்றவைகளை மீண்டும் மானிய அடிப்படையில் வழங்குவது இலங்கையைப் பின்னோக்கி இழுக்கும்ஒருநடவடிக்கை. மானியங்கள் வழங்குவதற்கான நிதி இலங்கையிடம் இல்லை. வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று மானியங்களை வழங்குவது மீண்டும் கடன் நெருக்கடிக்குள் சிக்க வைக்கும். 'அஸ்வெசும' போன்றவற்றை குறுகியகால நன்மைக்காகப் பயன்படுத்தலாம் - என்றார். (எ-இ)


**வேலைக்கு ஆட்கள் தேவை**

பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை மற்றும் சிறியரக வாகனம் கூட்டுடன் தேவை.

தொடர்புகளுக்கு: **070 625 6132**

**வாடகைத்தாய் தேவை**

**நல்ல ஆரோக்கியமான வாடகைத்தாய் தேவை.**

தங்களின் விபரம் இரகசியமாக வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

தொடர்பு:- **074 004 7586**

(CS/54189) J-1


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி துயந்தன் அபிராமி** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி செல்வராணி தெய்வநாதன்**

(ஓய்வு பெற்ற மருத்துவ பரிசோதகர், யாழ் போதனா வைத்தியசாலை) அவர்கள் கடந்த 29-02-2024 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**நலன்புரிசங்கம், யாழ். மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(எ.42049) (N.1)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 05 . 1982

மறைவு 05 . 03 . 2008



**செல்வன் இராசேந்திரம் கருணாகரர்**

(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – வவுனியா)

ஆண்டுகள் பல ஓடினாலும்
உங்கள் நினைவுகள் மாறாது மகனே
இறுதிவரை துணையிருப்பாய் என்று எண்ணியிருந்தோம்
எங்களைப் பாதியில் பரிதவிக்கவிட்டு ஓடிமறைந்தாயோ
அன்பான உன் வார்த்தை அயராது
எங்கள் செவியில் ஒலிக்கிறது மகனே

சதுமலை தெற்கு, மானிப்பாய்.

உன் பிரிவால் வாடும் பெற்றோர்

(CS/54204) J-1

# Invitation for Bids (IFB)

## Ministry of Agriculture Agrarian Services, Animal Husbandry, Irrigation, Fisheries, Water Supply &Environment – Northern Province Purchasing of Fingerlings & Prawns

1. The Chairman Procurement Committee of the Ministry of Agriculture (MPC-Major) on behalf of the Ministry of Agriculture – Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for Fingerlings & Prawns for the Ministry of Agriculture, Northern Province on lot basis

| Serial No | Category | Type | Details of Districts & Tank No | | Required number of Fingerlings | Required number of Prawns |
|---|---|---|---|---|---|---|
| 01 | NP/31/02/F03/P.F&P/2024 - I | LOT - A | Jaffna & Kilinochchi | 08 | 673,600 | 650,000 |
| 02 | NP/31/02/F03/P.F&P/2024 -II | LOT - B | Mullaitivu | 14 | 860,500 | 800,000 |
| 03 | NP/31/02/F03/P.F&P/2024 -III | LOT - C | Vavuniya | 08 | 447,000 | 300,000 |
| | NP/31/02/F03/P.F&P/2024 - IV | LOT - D | Mannar | 05 | 446,450 | 300,000 |

2. Bidding will be conducted through the National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirement;
    1. Bidder shall have an Aquaculture Management License
    2. The P. Fin Cir No-04/2020 be applicable for government enterprise.
4. To qualify for the award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria given in Section 2 –Bidding Data.
5. Interested bidders may obtain further information from the **Ministry of Agriculture – Northern Province, Palaly Road,Tirunelveli, Jaffna,**(T.No 021 221 7305, Fax 021 221 7304)and inspect the bidding documents at the Ministry of Agriculture from 9.00 hrs to 15.00 hrs on working days.
6. A complete set of Bidding Documents in the English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Ministry of Agriculture – **NP from 05th March 2024 to 25thMarch 2024** from 09.00 hrs to 15.00 hrs upon payment of a non-refundable fee should be made as given in the table. The method of payment will be cash.
7. Bids shall be delivered to the **Ministry of Agriculture – Northern Province, Palaly Road,Tirunelveli, Jaffna** on or before the closing time of **14.00 hrs of 26th March 2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids must be accompanied by a Bid-Security as per the information given in the table.

| No | Description | Allocation (m) | Bid Security Amount (Rs) | Bid Security Validity Date | Non Refundable Fees |
|---|---|---|---|---|---|
| 1 | LOT - A | 4.3 | 43,000.00 | 08.07.2024 | 3,500.00 |
| 2 | LOT - B | 5.5 | 55,000.00 | | |
| 3 | LOT - C | 2.6 | 26,000.00 | | |
| 4 | LOT - D | 2.6 | 26,000.00 | | |

9. Pre-bid meeting will be held on 19th March 2024 at 14 hrs. in the Ministry of Agriculture – Northern Province, Palaly Road,Tirunelveli Jaffna. Interested bidders may attend the meeting at their own expense.

**Jegu**
**Chairman, Procurement Committee,**
**Ministry of Agriculture – NP**
**Palaly Road, Tirunelveli, Jaffna.**

**05.03.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை பகிரங்க ஏல அறிவித்தல்

எமது சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள் , கணினி சாதனப் பொருட்கள் , தார் பரல்கள் , வாகன பற்றரிகள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விடப்பட உள்ளது.

**காலம்** : **2024.03.19** (செவ்வாய்க்கிழமை)
**நேரம்** : மு.ப **10.30**
**இடம்** : தலைமை அலுவலகம் , வலிகாமம் வடக்கு பிரதேசசபை , காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்கக்கூடிய கட்டணம் ரூ. 1000.00 ஐயும் , மீளளிக்க முடியாத படிவக்கட்டணம் ரூபா 250.00 ஐயும் தலைமை அலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை கொல்லங்கலட்டியில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். சித்தி பெறும் கேள்விதாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். குறித்த ஏலத்திற்கு விடப்படும் பொருட்களை சபையின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக தகவல்களுக்கு **0212241130.**

**சு.சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**

---

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Vacancy Advertisement for Logistician – Jaffna and Kilinochchi

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,100 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

We are looking to recruit Logisticians for Jaffna and Kilinochchi. Who will support on procurement process on time and to a high standard.

**Essential Requirements:**

- At least two years of relevant experience in Logistic supply chain and or procurement.
- Computer literate specially in MS Office.
- Driving license. Must be able to drive Motor bike and vehicle is essential.
- Good communication skills – minimum intermediate level English

**The Logisticians Responsibilities are.**

- Leading on procurement required in Kilinochchi.
- Sourcing and negotiating with suppliers.
- Ensure adherence to HALO Logistics SOP and local programme regulations in all procurement activities.
- Coordinating with the transporters.
- Maintain, prepare, and update all Purchase Requests and Kit Transfer document Scanning and filing.
- Maintaining hard and soft copy correspondence records.
- Support the management of the Colombo office, procurement of office and accommodation supplies.
- Provide logistical support during workshop, meeting and other official event.
- Any other duties assigned by the Logistics Officer and Senior management with their duties as required.


All applications must be submitted to the below address no later than **Friday 15 March 2024 either by Post or via email below.** "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

**02 March 2024**

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
**திரு. சி. சிவநாவலன்** அவர்களின் அன்பு மகன்

## செல்வன் சிவநாவலன் பரணிதன்

**(யா/ சாவகச்சேரி, இந்துக் கல்லூரி 2024, உயிரியல் பிரிவு மாணவன்)**

அவர்களின் திடீர் மறைவிற்கு அன்னாரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.**

(CS/54228) J-1

---

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- நாகலிங்கம் தேவேந்திரன் பெண் ஞானரதி |
| விண்ணப்பதாரர் பெயர் | :- நாகலிங்கம் தேவேந்திரன் பெண் ஞானரதி |
| முகவரி | :- 63-1/5 , றீஜென்றி ரவர்ஸ். மயூரா பிளேஸ். கொழும்பு - 06 |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 18. எட்டாங்கட்டை வீதியில் ஆதன இல. 221 இல் அமைந்துள்ள தெல்லிப்பழைக் கோயிற்பற்று. தெல்லிப்பழை கிழக்கு இறை "நெடுங்கண்ணி" என்ற ஆதனம் A.பொன்னம்பலம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 19.11.2011 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் சு. சிவபாதம் அவர்கள் முகதாவில் இலக்கம் 65 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் ஆதன அட்டவணையில் குறித்த காணியின் விஸ்தீரணம் நில.பர. 08 குளி 10.9 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த ஆதனத்திற்கான உரித்து வரலாற்று ஆவணமாக அதே திகதியில் அதே நொத்தாரிசு முகதா வில் இதன் முன்னிலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி சொந்தமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 65ம் இலக்க உறுதிக்கான உரித்து வரலாறாக குறிப்பிட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு சு. சிவபாதம் முகதாவில் 2011.11.19 ம் திகதியில் நிறைவேறிய 64ம் இலக்க நன்கொடை உறுதியின் ஆதன அட்டவணையில் குறித்த ஆதனம் நில.பர. 4 குளி 8 1/2 பின்பு அளவின்படி நில.பர.4 குளி 2.77 உம் ஆட்சிப்படியான காணியும் சேர்த்து நில.பர. 8 குளி 10.9 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த 64ம் இலக்க உறுதிக்கான உரித்து வரலாற்று ஆவணமாக பிரசித்த நொத்தாரிசு செ. புண்ணியமூர்த்தி முகதாவில் 1979.03.22ம் திகதியில் 840ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதிப்படியும் நீண்டகால ஆட்சிப்படியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குறித்த ஆட்சி உரித்தை வெளிப்படுத்துகின்ற தனியான உறுதி எதுவும் விண்ணப்பதாரரால் இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை. அத்துடன் குறித்த 840ம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் குறித்த காணியின் விஸ்தீரணம் நில.பர.4 குளி 8 1/2 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறித்த 840ம் இலக்க உறுதிக்கான உரித்து வரலாற்று ஆவணமாக பிரசித்த நொத்தாரிசு L.C. Fernando முகதாவில் 1969.03.28ம் திகதியில் 988ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குறித்த அவ் உறுதியின் பிரதியும் இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை.

எனவே காணியின் விஸ்தீரணமானது இவ் ஆதனத்தின் முந்திய உறுதிகள் மற்றும் காணிப்பதி வகப் பதிவேடுகளில் குறித்த அளவிலும் விட பாரிய மாறுபாடுள்ளதாகக் காணப்படுகின்றது. மேலும் ஆவணங்களிலிருந்து காணியின் விஸ்தீரண அதிகரிப்பு தொடர்பில் கண்டறிய இயலாதுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி. தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கு இறை "நெடுங்கண்ணி" நிலப்பரப்பு எட்டும் குழி பத்து தசம் ஒன்பதும் (நிலப்.08 குழி 10.9) வீடும். தற்காலிகக் கொட்டிலும். கிணறும் மலசலகூடமும். செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லைகள்

**கிழக்கு** :- நவரத்தினராசா பெண் ஞானாம்பிகையின் ஆதனமும். றோட்டும்
**வடக்கு** :- றோட்டு
**மேற்கு** :- பத்து (10) அடி அகலமான கையொழுங்கை
**தெற்கு** :- இராமேந்திரா பெண் சரஸ்வதியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை தேவேந்திரன் பெண் ஞானரதி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் தேவேந்திரன் பெண் ஞானரதி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சட்டத்தரணிகளுக்கான சட்ட மாநாடு மற்றும் தொழில் வாண்மை விருத்தி தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில், சிரேஷ்ட சட்டத்தரணி த.தவராசா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

கருத்தரங்கில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.சி.டபிள்யூ. நவாஸ், யாழ்ப்பாண மாவட்ட மேல் நீதிமன்ற நீதியரசர் எம் மனாஸ், மாவட்ட நீதிமன்ற நீதிபதி என். சதீஷ்குமார் மற்றும் பிரதேச நீதிமன்ற நீதிபதிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகள், சட்டத்தரணி சங்க உறுப்பினர்கள், இளம் சட்டத்தரணிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-27)




வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டி, வத்திராயன் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர், செயலக அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-27)



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் திறன்விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் 'ஊடகவியல்' சார்ந்த கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன், ஊடகவியல் சார்ந்த மாவட்ட ஊடக அலுவலர் தி.திவாகர், மாவட்டச் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள், ஏனைய கிளைகளில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-35)



முல்லைத்தீவு, தேராவில் தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி பாடசாலை முதல்வர் பெ.பாலகிருஷ்ணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் சி.ஜெயகாந்தன், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-13)

# காது மருத்துவ கருவி கையளிப்பு

மன்னார், மார்ச் 4

மன்னார், கண்டி, நல்லூர் ஆகிய றோட்டரிக் கழகங்கள் இணைந்து மன்னார் பொது மருத்துவமனைக்குக் காது மருத்துவம் தொடர்பான 'Digital Auto scope' மற்றும் 'Audiometer' போன்ற கருவிகளை 'ENT' பிரிவுக்கு அண்மையில் வழங்கி வைத்தன. (ப-213)






மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு, திருக்கேதீச்சரம் திருத்தல பாதயாத்திரிகர்கள் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத் தலைவர் சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் ஆகியோரின் தலைமையில் மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. (6-18)

நயினாதீவு அஞ்சல் அலுவலகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கௌரவிப்பு விழா, முத்திரைக் கண்காட்சி மற்றும் விற்பனை மேம்படுத்தல் போன்ற நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ப-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வரலாற்றில் முதன்முறையாக

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



## இன்று கையளிப்பு

கொழும்பு, மார்ச் 5

**இலங்கை அரசியல் வரலாற்றில் சபாநாயகர் ஒருவருக்கு எதிராக முதன்முறையாக நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று கையளிக்கப்படும் என்று சட்டத்துறை பேராசிரியரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"இதுவரையில் 4 பிரதமர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 14 அமைச்சர்களுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல அரசாங்கங்களுக்கு எதிராக 27 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், சபாநாயகர் ஒருவருக்கு எதிராக இம்முறையே நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்படுகின்றது. இதற்கு முன்னர் 25 சபாநாயகர்கள் இருந்துள்ளனர், அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவில்லை. மாற்றுவழி எதுவும் இல்லாத காரணத்தாலேயே எதிரணி பொறுப்புடன் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிரணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன" - என்றார். (அ-ஒ-44)

## கணவனால் கைவிடப்பட்ட

# இளம் தாயும் மகனும் பாதுகாப்பு இல்லத்துக்கு

## ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 5

வவுனியாவில், கணவனால் கைவிடப்பட்ட நிலையில் நிர்கதிக்குள்ளான இளம் தாய் மற்றும் விசேட தேவையுடைய 7 வயது மகன் இருவரையும் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



வடக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவுக்கு இளம் தாய் மற்றும் மகன் இருவரும் கணவனால் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பான தகவல் கிடைக்கப்பெற்றது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸால், ஆராய்ந்து வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய அபயம் பிரிவினரால், வவுனியாப் பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாகச் செயற்பட்ட வவுனியா பிரதேச செயலாளர், சிறுவனையும், இளம் தாயையும் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ஒ-27-26)

## காணிகளை மீட்க

# தபால் அட்டைகளை அனுப்பும் போராட்டம்

மன்னார், மார்ச் 5

'எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள்' எனும் தொனிப் பொருளில் நிலத்தை இழந்த மக்களின் குரல் அமைப்பின் ஊடாக வடமாகாண ரீதியாக இராணுவம், கடற்படை மற்றும் ஏனைய திணைக்களம் வசம் இருக்கும் மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி தபால் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்கும் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை மன்னாரில் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

வடமாகாண ரீதியாக மக்களின் காணிகளை அரசாங்கம் மற்றும் முப்படையினர் கையகப்படுத்தி அந்தக் காணிகளில் வணிகச் செயற்பாடுகள் மற்றும் விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் காணிக்குச் சொந்தகாரரான மக்கள் காணிகள் இன்றியும் வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் மக்களின் காணிகளில் குடியிருக்கும் படையினர் காணிகளை மக்களுக்கு விடுவித்து வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அலுவலகத்துக்கு 10 ஆயிரம் தபால் அட்டைகள் அனுப்பி வைக்கும் போராட்டமே மன்னாரில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் காணிகள் தொடர்பான தெளிவூட்டல்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் நிகழ்வு நிறைவடைந்த பின்னர் மன்னார் தபாலகத்தில் இருந்து ஜனாதிபதிச் செயலகத்துக்குக் காணி விடுவிப்பு தொடர்பான தபால் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன. (அ-ஒ-56-60)




# மரண அறிவித்தல்

## நவமணி நடனசிவராசா



தோற்றம் 04.10.1940 — மறைவு 02.03.2024

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நவமணி நடனசிவராசா அவர்கள் (02.03.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சேதுலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடனசிவராசா அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்தி, தயாளினி, சசிதரன், ராகினி ஆகியோரின் பாசமிகு தயாரும், தனபாலன், குணரட்னம், நளினி காலஞ்சென்ற நித்தியானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கெனோஜா துவாரகன், தரிஜா பிரசாத், றொசாந்தன், லதுசன், தாரணி சுபிதரன், கௌதம், சந்தோஸ், யதுஷா, மிருதிலா, கார்த்திகா தயந்தன், கார்த்திகன், கீர்த்திகா நிசாந்தன், மயூரிகா, தர்சிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற கனகம்மா, தெய்வானைப்பிள்ளை, வேலாயுதபிள்ளை, பூதத்தம்பி மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மித்திரன், விக்ரம், நவீன், நித்தின், சயிரா, தியாரா, ஹரினி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.

(CS 24002) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1946 — மறைவு 03 . 03 . 2024



## இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சவுதி அரேபியா, லண்டனில் வசித்தவரும், தற்போது கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்) அவர்கள் கடந்த (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - இரத்தினம் தம்பதியினரின் மருமகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார் (லண்டன்), செந்தில்குமார் P.S குமரன் (புவியியல் ஆசிரியர்), சஞ்ஜீவன் (போர்த்துக்கல்), தனூசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபோதினி (லண்டன்), அங்கயற்கண்ணி (ஆசிரியை, யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி), பிரவீணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், அன்னலட்சுமி, ஞானம்மா மற்றும் தவராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தனபாலசிங்கம், பரமேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், பிரதிஸ்கா, தக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,
[illegible]
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 611 6453

(CS 28098) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெடுக்குநாறிமலையில்

# சிவராத்திரி வழிபாட்டைத் தடுக்க பொலிஸ் எடுத்த முயற்சி பிசுபிசுப்பு

வவுனியா, மார்ச் 5

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டைத் தடுப்பதற்குப் பொலிஸார் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி மகாசிவராத்திரியை முன்னிட்டு வெடுக்குநாறிமலையில் விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஆலயநிர்வாகத்தினர் முயற்சிகளை எடுத்திருந்தனர். இரவுப் பூசை என்பதால் மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்த ஆலய நிர்வாகம் முயற்சித்த நிலையில், நீதிமன்ற அனுமதி பெறப்படவேண்டும் என நெடுங்கேணிப் பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து வவுனியா நீதிமன்றில் ஆலய நிர்வாகம் சார்பில் கடந்தவாரம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான விசாரணை மன்றில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. விடயங்களை ஆராய்ந்த நீதிவான் வெடுக்குநாறிமலையில் ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் செயற்படுவதற்கு, நேற்றுக் கட்டளை மீள வழங்கப்பட்டது.

தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தாமல், புதிய கட்டுமானங்களை மேற்கொள்ளாமல் பூசை வழிபாடுகளை முன்னெடுக்கமுடியும் என நீதிமன்றம் முன்னர் வழங்கிய கட்டளையையே மீண்டும் வழங்கியுள்ளமையால் ஆலய நிர்வாகத்தினர் மின்பிறப்பாக்கியை சிவராத்திரி அன்று பயன்படுத்தவுள்ளனர்.

இதேவேளை - வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி உற்சவத்தை குழப்பும் வகையில் குருந்தூர்மலை விகாராதிபதி முன்னெடுக்கும் பரப்புரைகள் தொடர்பில் வெடுக்குநாறிமலை ஆலயத்தின் செயலாளர் துரைராசா தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை விகாராதிபதி எமது ஆலயத்தை இலக்கு வைத்து சில கடும்போக்குவாதிகளை அழைத்துக் கொண்டு அண்மையில் ஆலயத்துக்கு வந்திருந்தார். அவர் சிவராத்திரி தினத்தன்று சிங்கள மக்களை அணிதிரட்டி அதனைக் குழப்பப்போவதான கருத்துகளை முகநூலில் பகிர்ந்துள்ளார். இவ்வாறு அவர் நடந்துகொள்கின்றமை மிகவும் வருத்தம் அளிக்கின்றது. வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமானது தொன்றுதொட்டு எமது மக்களால் வழிபடப்பட்டுவந்த ஓர் ஆலயம். பௌத்த கடும்போக்குவாதிகளின் தூண்டுதலிலேயே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரிகின்றது. இருப்பினும் எதிர்வரும் மகா சிவராத்திரி மிகவும் சிறப்புற இடம்பெறும் - என்றார். (அ-ஒ-110)

## தமிழர்...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாவுத்தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு, விடுதலைசெய்யப்பட்ட சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் வருவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்த நிலையில் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் உயிரிழந்திருந்தார்.

அவரின் திருவுடலம் சகோதரி வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு நேற்று திங்கட்கிழமை நண்பகல் சமயக் கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் அறிவகம் சனசமூக நிலையத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அவருடைய பூர்வீக இல்லத்துக்கு அடுத்து செல்லப்பட்டது. அங்கிருந்து தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் உடுப்பிட்டி, கெருடாவில் - வல்வெட்டித்துறை ஊடாக பொலிகண்டி ஊடாக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டுக்கு முன்பாக உடலம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான இறுதி ஊர்வலம் இரவு 7 மணிக்கு எள்ளங்குளம் இந்து மயானத்தை வந்தடைந்தது. அங்கு தேவாரம் ஓதப்பட்டு விதை குழியில் திருநீறு தூவப்பட்டு குழி புனிதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பேழை திருநீறால் மூடப்பட்டு இரவு 7.30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

நல்லடக்க நிகழ்வுகளை வேலன்சுவாமிகள் நெறிப்படுத்தினார்.

இந்த இறுதிநிகழ்வுகளில் பங்கெடுத்த பலரும் இந்திய மத்திய, மாநில அரசுகளின் நயவஞ்சகத்தனத்தாலேயே சாந்தன் சாவடைந்தார் எனத் திட்டித்தீர்த்து சாபமிட்டதையும் அவதானிக்க முடிந்தது. (அ-ஒ-100)

## சாந்தனைத்தான்...

விடுத்துள்ளார். உடுப்பிட்டி கற்பகப் பிள்ளையார் ஆலய முன்றிலில் அவ்வூர் பொதுமக்களால் நேற்று நண்பகல் முன்னெடுக்கப்பட்டிருந்த சாந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்த சட்டத்தரணி புகழேந்தி ஆற்றிய அஞ்சலி உரையின் போது இந்தக்கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாந்தனை எப்படியாவது காப்பாற்றித் தாயிடம் அனுப்பிவைப்போம் என்றே நம்பியிருந்தோம். சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் இருந்த சாந்தனின் உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டு நினைவிழந்த நிலைக்குச் சென்றார். அந்த நிலையில் கூட எயார் அம்புலன்ஸ் மூலமாக கட்டுநாயக்கா ஊடாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். இருந்தும் அனைத்துப் போராட்டங்களும் பயனற்றுப்போகும் வகையில் அவர் உயிரிழந்தார்.

ஈழத்தில் இருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். நீங்கள் அனைவரும் தமிழ்நாட்டுக்கு உடனடியாக வரவேண்டும். திருச்சி சிறப்பு முகாமில் உள்ள எஞ்சிய மூவரும் எவ்வாறான கொடும் சிறையில் இருக்கின்றார்கள் என்பதை நேரடியாகப் பாருங்கள். தமிழ்நாடு முதலமைச்சரை நேரில் சந்தித்து, எஞ்சிய மூவரும் விரும்பிய இடங்களுக்குச் செல்வதற்கு உரிய அனுமதி கிடைக்கும் வரை அவர்களை தமிழ்நாட்டில் உள்ள உறவுகளிடம் கையளிக்குமாறு கோரிக்கை வையுங்கள். அது நடைபெற்றால் மட்டுமே அவர்களையாவது நாம் காப்பாற்றமுடியும்.

திருச்சி சிறப்பு முகாமில் உள்ள எஞ்சிய மூவரையும் காப்பாற்றி அவர்கள் விரும்பும் நாட்டுக்குச் சென்று அவர்களுடைய குடும்பத்துடன் நிம்மதியாக வாழவைப்பதற்கான சட்டப்போரட்டத்தை தமிழ்நாடு திரும்பிய கையோடு முழுவீச்சோடு முன்னெடுக்க உள்ளேன் - என்றார்.

சட்டத்தரணி புகழேந்தி, ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட சாந்தன், முருகன் உள்ளிட்டோரின் வழக்கு விடயங்களை 2005ஆம் ஆண்டு முதல் எவ்விதக் கட்டணங்களும் வாங்காது இலவசமாக முன்னெடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

## ராஜீவ்...

தமிழர்களின் விடுதலைப் போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை நசுக்கவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவே எம்மை அந்த வழக்கில் திட்டமிட்டுச் சிக்கவைத்தார்கள் என ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள முருகன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி கற்பகப் பிள்ளையார் ஆலய முன்றிலில் ஊர் பொதுமக்கள் சார்பில் நேற்று நண்பகல் இடம்பெற்ற சாந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வின்போது திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் முருகன் தொலைபேசி வழியாக அனுப்பிவைத்த அஞ்சலி உரை ஒலிபரப்பப்பட்டது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாந்தன் உள்ளிட்ட நாம் திட்டமிட்டுச் சிக்கவைக்கப்பட்டோம். அதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்து தமிழர்களது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் சதிவலை பின்னப்பட்டது.

கடந்த 32 வருடங்கள் உடல், மனரீதியாகப் பலமாக இருந்த சாந்தன் சிறப்பு முகாமில் ஒருவருடம் கூடத் தாக்குப்பிடிக்க முடியாது உயிரிழந்தார். சாந்தனின் உயிர் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டது. சாந்தனின் உயிர்பறிப்பிற்கு உரிய நீதி கிடைக்கவேண்டும். ஒட்டுமொத்தத் தமிழர்களும் சாந்தன் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அதன்மூலமே மிச்சமிருக்கும் எங்கள் மூவருக்கும் விடுதலை கிடைக்க வழியேற்படும் - என்றார். (அ-ஒ-100)

## மின்கட்டணம்...

தெரிவித்துள்ளது. 30 க்கும் குறைந்த மின்சார அலகுகளுக்கான கட்டணம் 33 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது. அதேநேரம், 31 முதல் 60 வரையான அலகுகளுக்கான கட்டணம் 28 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது. 61 முதல் 90 வரையான அலகுகளுக்கான கட்டணம் 30 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

90 முதல் 180 வரையான அலகுகளுக்கு 24 சதவீதமும், 180க்கும் மேற்பட்ட அலகுகளுக்கான கட்டணம் 18 சதவீதத்தாலும் குறைக்கப்படவுள்ளது.

இதேவேளை - சமய வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டணம் 33 சதவீதத்தாலும், விருந்தகங்கள் மற்றும் உணவகங்களுக்கான கட்டணம் 18 சதவீதத்தாலும் குறைக்கப்படவுள்ளது.

அரச நிறுவனங்களுக்கான கட்டணம் 22 சதவீதத்தாலும், பொதுவான கட்டணம் 23 சதவீதத்தாலும் குறைக்கப்படவுள்ளதாகப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ-இ)

## சுழிபுரத்தில்...

நிலை தோன்றியுள்ளது. சவுக்கடிப் பிள்ளையார் கோயிலுக்குப் பின்பாக ஓர் அரச மரம் உள்ளது. அந்த மரத்தின் கீழேயே கடற்படையினர் புத்தர் சிலையை நிறுவியுள்ளனர். அந்தப் பகுதியில் கடற்படையினர் முகாம் அமைத்திருந்தாலும் முகாமுக்கு வெளியிலேயே புத்தர் சிலையை நிறுவியுள்ளனர்.

இதேவேளை - சம்பில்துறையிலுள்ள விகாரைக்குப் பின்புறமாகவுள்ள கடற்பிரதேசத்தில் கடற்படையினர் மீன்பிடி நடவடிக்கைக்குத் தடைவிதித்திருந்தனர். விகாரையின் அழகு கெடுவதாகத் தெரிவித்து இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது சவுக்கடியிலும் புத்தர் சிலையை வைத்துவிட்டு கடற்றொழில் நடவடிக்கைக்குத் தடை விதிக்கப்படலாம் என மீனவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (அ-ஒ-125)

## கிணற்றுநீரைப்...

சாந்தனின் பூர்வீக இல்லத்துக்கு திருவுடல் எடுத்துவரப்பட்ட நிலையில் கிணற்று நீரை மகனுக்குப் பருக்கி வழியனுப்பி வைத்தார் சாந்தனின் தாய்.

முன்னதாக சாந்தனின் சகோதரியின் இல்லத்தில் நேற்று இறுதிக்கிரியை இடம்பெற்றது. தொடர்ந்து சாந்தனின் பூர்வீக இல்லத்துக்கு திருவுடல் எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு தமது கிணற்று நீரை சாந்தனுக்கு பருக்கினார். சாந்தனுக்குத் தனது கையால் ஒரு பிடி சோறாவது ஊட்டவேண்டுமென்ற தாயாரின் ஆசை நிராசையான நிலையில் வாய்க்கரிசியே அவருக்குப் போட முடிந்தது. பின்னர் தனது இளைய மகனுக்கு வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் மாலைகளை அணிவித்து மகனைத் தாயார் அனுப்பி வைத்தார்.

"பிள்ளையை உங்களுடன் (தந்தையான தில்லையம்பலம்) அழைத்துச் சென்றுவிட்டீர்கள். எனக்கும் அவன் பிள்ளை தானே. என்னிடம் விட்டுச் சென்றிருக்கலாமே" என கண்ணீர் மல்கச் சொல்லியவாறே மகனை அவர் வழி அனுப்பிவைத்தார். (அ-ஒ-100)

## பெற்றோல்...

ஒன்றின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டு 447 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 458 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 257 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒக்ரேன் 92 ரக பெற்றோலின் விலை மற்றும் ஓட்டோ டீசலின் விலையில் மாற்றம் இல்லை. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சர்வதேச உதைபந்து போட்டியில் பங்கேற்ற சிறுவன் கௌரவிப்பு

அபுதாபி கிண்ணம் 2024 சர்வதேச உதைப்பாட்டத் தொடரில் 12வயதுப் பிரிவில் இலங்கை அணி சார்பாக பங்குபற்றிய கிளிநொச்சியைச் சேர்ந்த சுரேஸ் கண்ணா தனுஸ் என்ற சிறுவன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முற்போக்கு சமத்துவ இளைஞர் அணியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.மோகனதாஸ் கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதி அதிபர், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-113)

# மின் வேலிகளால் கால்நடைகள் பலி!

### பண்ணையாளர்கள் விசனம்

**முல்லைத்தீவு, மார்ச் 5**

**துணுக்காய் - கல்விளானில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளில் சிக்கி 41 கால்நடைகள் உயிரிழந்துள்ளன என்று பண்ணையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

எங்களுடைய பிரதேசத்தில் அறுவடை முடிவடைந்துள்ளது. இதனால் பட்டிகளைத் திறந்து மேய்ச்சலுக்கு விடுவது வழமை. இம்முறையும் அவ்வாறு திறந்துவிடப்பட்ட கால்நடைகள் நில மட்டத்தோடு சேர்த்து அமைக்கப்பட்ட சட்டவிரோத மின்சாரவேலியில் சிக்கி 38வெள்ளாடுகள், 2செம்மறியாடுகள், ஒரு பசுமாடுஎன்பன உயிரிழந்துள்ளன. யானை வேலியில் பகல்வேளைகளில் நிலத்தோடு அமைக்கப்பட்ட முள்ளுக்கம்பிகளுக்கு மின்சாரம்பாச்சியமையாலேயே கால்நடைகள் அவற்றில் சிக்கி உயிரிழந்துள்ளன. (ச-35)



## அன்னம் சின்னத்தில் களமிறங்கும் ரணில்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க அன்னம் சின்னத்திலேயே களமிறங்குவார் என அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காகப் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்பட்டுவருவதாகவும், நிமல் லான்சா தரப்பு, மொட்டுக் கட்சியின் சுயாதீன தரப்பு உட்படப் பலரும் ரணிலை ஆதரிக்கவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. மே தினக் கூட்டத்தை பிரமாண்டமாக நடத்தி மெகா கூட்டணியை மக்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றது.

அதேபோல ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டணியில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-44)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ப-125)

## ஜே.வி.பி.க்கு எதிராக ரணில் 3 உத்திகள்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு எதிராக மூன்று விளம்பர உத்திகளைப் பயன்படுத்தவுள்ளார் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

தேசிய மக்கள் சக்திக்கு எதிரான பரப்புரைக்குப் பயன்படுத்துவதற்காக ஜனாதிபதி விளம்பர நிறுவனங்களின் உதவியை நாடியுள்ளார். 1983ஆம் ஆண்டு வன்முறைகள் 1988-89 ஆண்டு காலப்பகுதி வன்முறைகள் மற்றும் 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு ஜே.வி.பி.யை இலக்கு வைக்க வேண்டும் என்று இந்த விளம்பர நிறுவனங்களிடம் கோரப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

**வீடு வாடகைக்கு**

இல - 42, பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கில் உள்ள புதிய வீடு, சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

(CS 24001) S-1

தொடர்பு: 077 265 8065

**தேவை**

ஒப்பந்தம் பெற்ற கட்டட நிர்மாணத்துறைக்கு 1 வருடம் அனுபவமிக்க தொழில்நுட்ப அலுவலர் (Technical officer) தேவை.

(CS/28097) J-1

தொடர்பு: 076 760 0403

**வாடகைக்கு**

கல்வியங்காடு மூன்றாம் கட்டையில் உள்ள கடையும் கடைக்கு மேல் தளத்தில் உள்ள வீடும் வாடகைக்குண்டு.

077 1750746

**வீடு வாடகைக்கு தேவை**

சுன்னாகம், உடுவில், உரும்பிராய், இணுவில் ஆகிய இடங்களில் சிறிய வீடு வாடகைக்கு தேவை.

074 016 7518

**வேலையாட்கள் தேவை**

ஊரெழுவில் அமைந்துள்ள N VINI RESTAURANT இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
ரொட்டி வேலை,
கொத்து றைஸ் போடத் தெரிந்தவர்கள்,
WAITER (ஆண்/பெண்),
சமையல் வேலை தெரிந்தவர்கள் (ஆண்/பெண்)

(CS 24003) S-1

075 230 1104, 074 230 1234

**வேலையாட்கள் தேவை**

ஊரெழுவில் அமைந்துள்ள TJ SHOPPING MALL இற்கு CASHIER வேலை தெரிந்த (அனுபவம் உள்ள) பெண்கள் தேவை. Qualification - A/L

(CS 24003) S-1

077 567 6183, 074 230 1234

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Bajaj Discover 125 BBN மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

(CS/54229) J-1


077 414 9689

**வேலைவாய்ப்பு**

Nurse, உதவியாளர், கிளீனர், வெல்டிங் Work, Food Delivery, வெயிட்டர், House Keeping, குழந்தை பராமரிப்பாளர், இனிப்பு பலகாரம் செய்யக்கூடியவர்கள், பக்கிங் செய்பவர்கள்.

074 138 3368, 074 083 3368

## மரண அறிவித்தல்



மண்ணில்
12 . 02 . 1938

விண்ணில்
02 . 03 . 2024

### பொன்னுச்சாமி பாலச்சந்திரன் (பாலா)

(இளைப்பாறிய சாலைப் பரிசோதகர், இ.போ.ச கோண்டாவில் சாலை, இளைப்பாறிய பகுதி நேர ஆங்கில ஆசிரியர் - விக்னேஸ்வரா வித்தியாலயம், முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம், குருசுவாமி வித்தியாலயம் - கைதடி)

ஓடை ஒழுங்கை வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கைதடி, கொழும்பு மற்றும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி பாலச்சந்திரன் கடந்த 02.03.2024 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் சிவபாய்க்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமகள், முகுந்தன் (பெல்ஜியம்), சயந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (புகையிரத நிலைய அதிபர்), இராஜேந்திரம் (ஆசிரியர்), மகேஸ்வரி (லண்டன்), அமிர்தாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரனும் மற்றும் சதானந்தன் (TCT ஊழியர்), சுபாஜினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமேசன், நர்த்தனன் (அவுஸ்திரேலியா), தரணியன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் மற்றும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, நாகம்மா, இலங்கை நாயகம் (ஆசிரியர்), முத்துக்குமாரு (தபாலதிபர்), கணேஸ்வரன் (ஜேர்மன்) மற்றும் அருந்ததி, பராசக்தி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9.30 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.28096) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.